TAMIL NADU LEGISLAT
5 MAY 19
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1972 பிப்ரவரி 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

நேபாள மன்னர் திரு. மகேந்திரா அவர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது அண்டை நாடான நேபாளத்தின் மன்னர் திரு. மகேந்திரா அவர்கள் நேற்றையதினம் (31—1—1972) மறைந்த செய்தியை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தியாவின் வடபுலத்தில் நம் நாட்டுடன் நட்புரிமையுடன் இருந்து நம்முடன் வாணிபம், கலாசாரம் முதலியவற்றில் தொடர்பு கொண்டு இயங்கிவரும் நாடுகளில் நேபாளமும் ஒன்றாகும். அந்நாட்டு மன்னரின் மறைவுக்கு இப்பேரவையின் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் நாம் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 211 முதல் 215 வரை எண்ணுள்ள வினாக்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி, தள்ளிவைக்கப்படுகின்றன.

Posts of Civil Surgeons in the Office of Director of Medical Services.

* 228 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether a number of posts of Civil Surgeons in the Office of the Director of Medical Services have been vacant for many months now;

(b) if so, the details thereof; and

(c) the reasons therefor ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தற்சமயம் எந்தப் பதவியும் அந்த அலுவலகத்தில் காலியாக இல்லை.

(இ) & (உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என் டென்னிஸ் : தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு அதிகமாக இடங்கள் காலியாக இல்லாமலிருக்க அரசு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது மருத்துவத் துறையாக இருப்பதால் இதிலே பல பகுதிகள் மாவட்ட மருத்துவ அதிகாரியாக உள்ளவர்களைக் கொண்டு பல நேரங்களில் நிரப்பப்பட வேண்டியிருக்கிறது. அந்த மாவட்டத்திற்கு மற்றொரு அதிகாரியை நியமிக்காவிட்டால் மாவட்ட நிர்வாகம் அந்த நேரத்தில் செம்மையாகவும் சீராகவும் நடைபெறுவது கடினம். எனவே, இவற்றிலே கொஞ்சம் கால தாமதம் ஏற்படத் தான் செய்யும். இருந்தாலும், நிர்வாகத்தினுடைய நலனை முன்னிட்டு அந்தத் தாமதத்தை அரசு ஏற்றுக் கொள்ளுகிறது.

Government Hospital at Kuzhithurai

* 229 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to shift the Kuzhithurai Government Hospital from its present location to a more convenient place; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : குழித்துறையிலிருக்கும் மருத்துவ மனை சிறிய கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. விஸ்தரிக்கப்பட வேண்டிய பூமி அந்தக் கட்டடம் இருக்கும் இடத்தை யொட்டி இல்லை. ஆகையால் அந்த மருத்துவ மனையை வசதியான இடத்திற்கு மாற்றி விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்ற பொறுப்புள்ளவர்கள் அந்தப் பகுதியில் ஒரு சிறந்த கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களானால், அரசாங்கம் அப்பொழுது மாற்றுவதற்கு முயற்சிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது இந்த மருத்துவ மனை அமைந்திருக்கிற இடம் முன்னாள் ட்ராவலர்ஸ் பங்களாவாக இருந்தது. அது வசதியில்லாதவொரு பகுதியாக இருக்கிறது. குழித்துறை தாலுக்கா தலைநகரமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு சௌகரியமான ஒரு இடத்திலே மாற்றுவதாக முன்பு ஒரு செயற்குறிப்பு இருந்ததே, அதையாவது இப்பொழுது இந்த அரசு புனர்ப்பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், புதிதாக எந்த இடத்திலே ஒரு மருத்துவ மனை அமைப்பதாக இருந்தாலும், இப்போதுள்ள தேவைக்கேற்ப பெரும் பொருள் செலவழித்து, தகுந்த முறையில் கட்டடங்கள்